Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ ஆடிமீ ௭௨ (23-7-39) { இல. 38

படித்த பெண்களுக்கு மாப்பிள்ளைக் கஷ்டம்

யாழ்ப்பாணக் கல்லூரிப் பழையமாணவர் கொண்டாட்ட தினத்திற் சொற்பொழிவு நிகழ்த்திய திரு; டாக்டர் இரத்திநேசர் அவர்கள், படித்த பெண்களுக்கு மாப்பிள்ளை தேடும் வேலையையும் விற்பனை அதிகாரி திரு. பசற் ஏற்றுக்கொள்ளுவாரோ என்று வேடிக்கையான ஒரு கேள்வியைக் கேட்டார். இக்கேள்வியினால் யாம் அறியக்கூடியது யாது? உயர்தரக் கல்விகற்ற பெண்கள் பலர் விவாகஞ் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதும், அவர்களை விவாகஞ் செய்து கொடுப்பது சங்கடமான காரியம் என்பதுமாம். உயர்தரக் கல்விகற்ற பெண்களை ஆடவர்கள் விவாகஞ் செய்ய ஏன் பின்னிற்கிறார்கள்? போலிக் கல்வியைக் கற்ற பெண்கள் வாழ்க்கைக்குத் துணையாகமாட்டார்கள். பெண்கள் பெண்களுக்கேற்ற கல்வியைக் கற்க வேண்டும். பெண்கள் வீட்டுக்குரியவர்கள். வீட்டைச் சிறப்பிப்பது அவர்களைப் பொறுத்த விஷயமாகும். பெண்கள் கல்விக்கும் ஆண்கள் கல்விக்கும் வித்தியாசம் ஏற்பட வேண்டும். பெண்களுக்கு நமது நாட்டு நாகரீகத்திற்கு ஏற்ற கல்வி கற்பிக்க வேண்டும். அறிவும் நாகரீகம் ததும்பிய கல்வியைக் கற்ற பெண்களை விவாகஞ் செய்துகொடுக்குஞ் சங்கடம் ஏற்படாது.

பள்ளிக்கூடப் பரீக்ஷைகள்

பள்ளிக்கூடங்களில் தவணைப் பரீக்ஷை மாதப் பரீக்ஷை பக்கப் பரீக்ஷை முதலிய பரீக்ஷைகள் அடிக்கடி நடந்து வருகின்றன. இப்பரீக்ஷைகளினால் நன்மை விளைகின்றனவா? பரீக்ஷைகளை உபாத்தியாயர்கள் வைப்பது புள்ளிகளைப் பதிந்துவைப்பதற்காகவா? பரீக்ஷைகளினால் கல்வித்திருத்தம் ஏற்படுகின்றதா? இவ்வாறான சந்தேகங்கள் பலரிடத்திலும் இருக்கக்காணலாம்.

பரீக்ஷைகள் இரு நோக்கங்களோடு வைக்கப்படவேண்டும். முதலாவது மாணவனது கல்வி நிலையை அறிதல்; இரண்டாவது பள்ளிக்கூட நடைமுறைப் பிழைகளை அறிதல்; இவ்விரு நோக்கங்களுமின்றி வைக்கப்படும் பரீக்ஷைகளால் பிரயோசனம் ஒன்றுமில்லை.

பரீக்ஷைகள் உபாத்தியாயர்களுக்கு மாணவனது குறைகளை எடுத்துக் காட்டவல்லன. பரீக்ஷைகளன்றி வேறுவழியாக மாணவனது கல்வி நிலையை அறிதல் முடியாது.

பரீக்ஷைகளை நடாத்தினவுடன் விடைப்பத்திரங்களைத் திருத்திப் பிள்ளைகளிடம் கொடுத்தல் மாத்திரம் பரீக்ஷையின் நன்மையை விளைவிக்காது. ஒவ்வொருபரீக்ஷையைப்பற்றிப் பூரணமான அறிக்கை தயாரித்து அவ்வறிக்கையிற் காணப்படுங் குறைகளை நிவிர்த்திபண்ண முயலவேண்டும்.

பரீக்ஷைகளினாற் பிரயோசனமில்லையென்று பொதுவாகத் தள்ளிவிட முடியாது. பரீக்ஷைகளில் எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் மாணவனின் கல்வி நிலையை அள்விட சிறந்த வழிகள் வேறில்லை. பரீக்ஷைகளை எவ்வளவு ஊக்கத்தோடு நடத்துகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நன்மையைக் கொடுக்கும்.

கேடில்பசு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமேல், ஆடுஞ் சுகப்பொருளுக் கன்புறுவ தெந்நாளோ.

வறுமையை நீக்கிய உவமை

"வ. இ."

இரவுநேரம்; மேகம் இடித்து, மின்னி மழை பொழிகிறது. குளிர்காற்று 'ஜில்' என்று வீசுகிறது. இப்படியான வேளையில் அந்தப் பாழ்மண்டபத்திலே வடித்தெடுத்த வறுமையால் குழைத்தமைத்தது போன்ற ஓர் உருவம் 'குறண்டிக்'கொண்டு கிடக்கிறது. அந்தப் உடலை வெளிப்புறமாகக் காற்றின் குளிர் தாக்கிக்கொண்டிருந்தது. உட்புறமாக வறுமையின் குளிர்தாக்கிக் கொண்டிருந்தது."

இப்படி வருந்திக்கொண்டு அங்கே இருப்பது யார்? ஒருபுலவர்! தமது வறுமை நோயை நீக்கத் தெற்கே பாண்டிநாட்டை நோக்கிவந்தவர், மழைக்கு அம்மண்டபத்திலே ஒதுங்கியிருக்கிறார். அவருடைய நினைவு அந்த பாழ் மண்டபத்திலில்லை. தமது பொத்தல் குடிசையில், மனைவி மழையால் என்ன பாடுபடுகிறாளோ என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது ஆகாயத்திலே போய்க் கொண்டிருந்த நாரையைப் பார்த்து! அதை விளித்துக் கூறுகிறார். புலவரல்லவா? செய்யுளில் தான் கூறுகிறார்:—

"நாராய் நாராய் செங்கா(ல்) நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கா(ல்)நாராய்
நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி,
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் 'மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி,
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழையா ளனைக் கண்டன மெனுமே'
என்கிறார்.

இந்தப் பாட்டிலிருந்து, புலவர் நாரையை போகும் வழியில் தமது மனைவியிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகும்படி கேட்கிறார் என்பதை அறிந்து கொண்டிருப்பீர்கள்.

'இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழா'

தென்பதை யுணர்ந்த புலவர் நாரையை வர்ணிக்கிறார். அதன் சொண்டுக்கு எவ்வளவு சிறந்த உவமானமாகப் பிளந்த பனங்கிழங்கை உவமிக்கிறார். நாரை மனைவியோடு கூடிய நாரையாம். ஆம்; மனைவியின் அருமை தெரிந்ததாயிருந்தால்தானே தன் துன்பத்தையும் சிரத்தையுடன் தன் மனைவியிடம் சொல்லும்.

புலவர் தம் வீடிருக்கும் இடமோ மனைவி பெயரோ சொல்லிவிடவில்லை. "என் குடிசையின் சுவர் மழையில் நனைந்துகொண்டிருக்கும்" என்ற ஒரு குறிப்பிலேயே அந்த ஊரில் தமது வீட்டைக் காண்பித்துவிடுகிறார். ஆ! பொல்லாத வறுமையே! அந்த வீட்டில் ஒருத்தி இருப்பாளாம் பல்லி சொல்லுகிறதைக் கவனித்துக் கொண்டே. வறுமை நோய்க்கு மருந்து தேடிச்சென்ற கணவனின் வரவை எதிர்நோக்கும் ஏழைப்பெண்ணின் நிலைமை செய்யுளடிகளில் எவ்வளவு பரிதாபக் காட்சியாயிருக்கிறது பாருங்கள்.

புலவர் தன் மனைவியிடம் சொல்லும்படி நாரைக்குக் கூறுவதுதானென்ன? 'மதுரையில் ஒருவனைக் கண்டேன் என்றுசொல்' என்கிறார். பாவம் 'உன்புருஷனைக் கண்டேன்' என்று சொல்லி யனுப்புவதற்கே அவருக்கே வெட்கமாயிருக்கிறது. சீ மனைவியைச் செல்வமாக வைக்காதவனும் ஒரு புருஷனா? பெயர் சொல்ல அஞ்சும் புலவர் தனது வறுமைக கோலத்தைச் சொல்லுவதிலே தான் யாரென்பதை மனைவிக்கு அறிவிப்பதுடன், இன்னும் வறுமை நீங்கவில்லை, அதனால் வருந்திக் கொண்டுதானிருக்கிறேன். மருந்து வாங்கியபின் வந்துவிடுவேன் என்பதையும் உணர்த்திவிடுகிறார். எவ்வளவு சாதுரியம். செய்யுளில் அவரின் வறுமைக் கொடுமை சித்திரிக்கப்படும் அழகைப் பார்த்தீர்களா?

இந்த அழகிய செய்யுளைப் புலவர் பாடுவதற்கு அந்த வறுமைதான் காரணமல்லவா? ஆ! அந்த வறுமைக்கு என்ன பிரதியுபகாரந்தான் செய்யலாம். இந்த செய்யுளின் சாரத்தைப் பிழிந்து கொடுத்தால்தான் தகுமா?

'இப்படி வருந்திய புலவரின் வறுமை நீங்கிற்று என்பதையறிய ஆவல் கொள்வீர்களல்லவா? 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய்' என்று உவமானம் அமைத்தார்களல்லவா? அந்த உவமையே அவர் வறுமையைப் போக்கியது. புலவர் பாடும்பொழுது நகர் சோதனைக்கு வந்த பாண்டியன் மறைந்து நின்று கேட்டானென்றும், நாரையின் சொண்டுக்குச் சிறந்த உவமை ஒரு புலவரும் கூறாமையால், சிறந்த உவமை கூறுபவருக்குக் கொடுப்பதற்கு வைத்திருந்த பொற்கிழியை அரசன் அவருக்குக் கொடுத்தானென்றும் கூறுகிறார்கள்.

ஈழகேசரி கல்வி அனுபந்தம்

தனிப்பிரதி விலை சதம் -- 3

25 பிரதிகள் விலை சதம் — 50

தபாற் செலவு வேறு

ஆண்டுச் சந்தா ரூபா 2.

முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது.

பாட்டியின் பழங்கதை

(ரதபுரி – ரஞ்சிதன்)

(முற்றொடர்)

16. சாணி ஏடுக்கும் வேளையிலும்
சருவம் தேய்க்கும் வேளையிலும்
போணி கொண்டு பால்கறக்கப்
போகு மந்த வேளையிலும்
நாணல் கொண்டு புடலைக்கு
நல்ல வேலி கட்டையிலும்
கோணல் முகத்தைக் காட்டாமல்
கொஞ்சிக் குலாவி மகிழ்ந்திடுவார்.

17. என்றன் சிறுமி! என்கூந்தல்
இன்று காணும் பொலிவைப்பார்
உன்றன் 'கிரா'ப்பால் உன்முகமும்
உண்மை அழ்கும் குன்றியதே
என்றும் இயற்கை அழகின்முன்
எந்த அழகும் நின்றிடுமோ?
நன்று தீது எனக்கொண்டு
நாளும் நடக்க வேண்டுமடி!

18. இந்த நாளில் மாதர்கள்
ஏற்ற முறையில் சுதந்திரத்தை
வந்த வந்த வழியெல்லாம்
வாழ்வில் நாளும் மிகப்பெருக்கி
எந்த நாளும் உடைமீது
இச்சை கொண்டிவ் வுலகமதில்
சிந்தை யின்றி செல்வத்தைத்
தினமும் வாரி இறைக்கின்றார்.

19. வந்து பெருகும் வருவாயை
வாழ்வில் நாளும் கண்டளந்து
அந்த அந்த செலவிற்காய்
அன்றே அதனைப் பங்கிட்டு
எந்த நாளும் எம்வாழ்வில்
எளிய உடையைக் கைக்கொண்டு
வந்த வரவைக் கவியாமல்
வாழும் வாழ்வில் நின்றிடுவோம்.

20. முற்ற மூத்த முதியவரே
முழுது முலகை அறிந்தவராம்
பெற்ற தாயும் தந்தையினும்
பேணும் பெரிய தெய்வமேயாம்
சற்றும் சடைவு வெறுப்பின்றி
தாங்கள் கண்ட அனுபவத்தை
ஊற்ற இடத்தில் எடுத்துரைத்து
உலகைத் திருத்தும் உத்தமராம்.

21. வீட்டி லுள்ள முதியோர்கள்
விரும்பிச் சொல்லும் அனுபவம்போல்
ஏட்டி லெழுத்தை எண்ணிஎண்ணி
என்றும் அளந்து நின்றாலும்
நாட்டிற் கேற்ற அனுபவத்தை
நாளும் அதுவும் நயந்திடுமோ?
பாட்டைப் பாடும் பாவையே நீ
பவள வாயால் பகர்வாயே!

22. கற்ற படிப்பு கையளவு
கற்கும் படிப்பு உலகளவு,
உற்ற உலக அனுபவத்தை
ஒருங்கே நாளும் உரைப்பதற்கு
முற்ற மூத்த முதியவரே
முனைந்து சொல்லும் பண்டிதராம்
கற்றைக் குழலில் மலர்சூடும்
காரிகை இதனை அறிவாயே!

23. அன்றென் இளமைப் பருவத்தில்
அளந்து கண்ட பழமையெல்லாம்
இந்த நாளில் மிகமாற்றம்
யானே கண்டு மயங்குகின்றேன்
என்றன் மொழியை மனத்திருத்தி
எளிய வாழ்வைக் கைக்கொண்டு
இந்த உலகில் எந்நாளும்
இன்ப மடைந்து வாழ்வையே.

தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனைப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப், போக்குவ ரவற்ற பொருளனைவ தெந்நாளோ.

சில கெட்ட பழக்கங்கள்

1. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவைகளை பிடித்துக்கொண்டு, வருபவர்மீது புகையை விடுவது, வழி நெடுக எச்சிலைத் துப்புவது.

2. கள்ளை அருந்தித் தெருவில் வாந்தி செய்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து பின் கீழே விழுந்து புரளுவது; ஸ்மரணையற்றுக் கிடப்பது.

3. மாட்டைப் போன்று எதிரே வருபவர்மீது உராய்ந்து கொண்டு செல்வது.

4. கைவிரல் நகங்களை யெல்லாம் அடிக்கடி கடித்துத் துப்புவது.

5. மூக்கைக் கைக்குட்டையில் அடிக்கடி சிந்திச் சட்டைப்பைக்குள் போட்டு பத்திரப்படுத்திக் கொள்வது.

6. பத்துப்பேர் போகவர இருக்கும் பாதையில் லஜ்ஜையின்றி மல சலம் கழிப்பது.

7. கோழிகளையும் குருவிகளையும் தலைகீழாகத் தொங்கவிட்டுத் தெருவில் தூக்கிக்கொண்டு செல்வது.

8. மாமிசங்களை பலபேர் பார்க்கும்படி வீதியில் தூக்கிச் செல்வது.

9. டிராம்வண்டிகளிலும், ரயிலிலும் அழுக்கடைந்த ஆடைகளை உடுத்திக்கொண்டு செல்வது.

10. புகையிலைப் பொடியைப் பத்துப்பேர் நிறைந்துள்ள இடத்தில் போட்டுக் கொள்வது.

11. ஓயாமல் புகையிலையையும் வெற்றிலை பாக்கையும் போட்டுக்கொண்டு குதப்புவது.

12. வைக்கோல் அடைத்த ஒரு கன்றினைக் காட்டிப் பால் கறப்பது.

13. ஹோட்டலில் பலர் அறிய உட்கார்ந்துகொண்டு இட்டலியையோ அல்லது வடையையோ இரண்டு கைகளையும் உபயோகித்து விண்டு வாயில் போட்டுக்கொண்டு ஓசைப்படுத்திக்கொண்டே சாப்பிடுவது.

14. காலை நீட்டியபடியும் குந்திட்ட வண்ணமும் உட்கார்ந்துகொண்டு அன்னம் உண்பது.

15. க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நானம் செய்யாமல் சுத்தப்படாமல் துணியில் துடைத்துக் கொண்டு அன்னம் உண்பது.

16. ஒரே ஆடையை மேலும் கீழுமாக மாற்றி எட்டுநாள் உடுத்துவது.

17. ஸ்நானம் செய்தபின் நேற்று உடுத்திருந்த ஆடையையே உடுத்திக்கொண்டு மடிகொண்டாடுவது.

18. ஒரே நாளில் ஐந்துதடவை சிற்றுண்டியும் மூன்றுதடவை சோறும் உண்பது.

19. சிற்றுண்டி உண்ட பின்பு கை கழுவாவண்ணம் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டு வெளிக்கிளம்புவது.

20. சதா காலமும் கெட்ட பேச்சுப் பேசிக்கொண்டே யிருப்பது.

—'பாரதமணி'

தமிழின் பின் சென்ற பெருமாள்

[வ. ந.]

கல்வியறிவு மிக்க புலவர் எதையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லவர். கல்வியின்பத்திற்காக அவரையடைந்து அவருக்கு ஏவல் செய்வோர் பலர். கடவுள் கூடக் கல்வியின் சிறப்பிற்காக புலவர் சொற்றவாறு நடக்கின்றார். திருமழிசையாழ்வாரது சொற்படி பாம்பாகிய படுக்கையைச் சுருட்டிக்கொண்டு சென்றதும், மீண்டு முன்னிருந்த இடத்தையடைந்ததும் விஷ்ணுவே! இதற்குக் காரணம் ஆழ்வாரின் பைந்தமிழே!

திருமழிசையாழ்வார் திருக்கச்சியிலே யோகத்தில் எழுந்தருளியிருந்தார். அவருக்குச் சிறந்த சிஷ்யன் கணிகண்ணர். இவர்கள் கடவுளையேயன்றி மனிதரைத் துதிப்பதும் பாடுவதும் கிடையாது.

ஆழ்வாரை நாள்தோறும் பக்தியுடன் வணங்கி வந்தாள் ஒரு கிழவி. திருவுளமகிழ்ந்த ஆழ்வார் கிழவியின் எண்ணத்தையறிந்து யௌவன ஸ்திரீயாகும்படி அருள் செய்தார். தேவகன்னிகைபோன்று சிறப்புடன் விளங்கி நீங்கா இளமையடைந்தாள் கிழவி.

பல்லவராயன் என்ற அரசன் யௌவனமாதைக் கண்டதும் தன்னை மறந்து, ஆசைமேலீட்டால் அவளை அடைந்து, தன் குறையைக்கூறி இரந்தான். அவளும் சம்மதித்து அவனுடன் சென்றுவாழ ஒப்புக்கொண்டாள். வேண்டியளவு போகபாக்கியங்களை அனுபவித்தனர் இருவரும்.

அரசன் பருவம் அழிந்து நரைத்துத் திரைத்து முதுமையை நாடினான். மாது நீங்கா இளமையோடும் குன்றாத அழகோடும், என்றும் ஒரேமாதிரியாகவே காட்சியளித்தாள். அரசன் மனமிக வருந்தி, குன்றாத இளமையோடு இருப்பதற்குரிய காரணத்தை விசாரித்துத் தெளிந்தான். அரசனைப்பார்த்து, "திருமழிசை ஆழ்வாரைச் சேவித்து வழிபட்டால் இளமையை அடையலாம்" என்றாள் அக்கன்னிகை.

தன் வீட்டுக்கு வருகின்ற கணிகண்ணரை நோக்கி, திருமழிசையாழ்வாரைத் தன் இல்லத்துக்கு அழைத்து வரும்படியும், தான் அவரைச் சேவிக்க விரும்புவதாகவும் அரசன் கூறினான். கணிகண்ணர் "ஆழ்வார் ஒருவரில்லத்திற்கும் செல்பவரல்லர்" என விடைபகர்ந்தனர். அப்படியாயின் தன்மீது ஒரு பாட்டாவது பாடவேண்டும் என்று கேட்டான் அரசன். "நரஸ்துதி செய்வதில்லை" என்று அதையும் கணிகண்ணர் மறுத்தார். அரசன் பொங்கிய கோபத்துடன் அக்கினிக் கண்ணனாய் வெகுண்டு, கணிகண்ணரை ஊரைவிட்டு நீங்குமாறு கட்டளையிட்டான்.

கணிகண்ணர் ஆழ்வார் திருமுன்பு சென்று நடந்தவற்றைக்கூறிச் செல்ல விடைகேட்டார். நீ சென்றால் நானும் பெருமாளும் இங்கு இருக்கமாட்டோம் என்று கூறி பெருமாளைப் பார்த்து,

மொழி நடைப் பயிற்சி

ஒருவன் தான் சொல்லவேண்டிய கருத்தைத் தெளிவாகவும் பிழையில்லாமலும் தெரிவிப்பானுயின், அவன் மொழியில் நல்ல பயிற்சியுடையவன் எனப்படுவான். நாம் சொல்லும் எவ்விடயமும் கேட்பவர்கட்குத் தெளிவாக விளங்குமாறு சொல்லவேண்டும்; எழுதுவதும் அவ்வாறே தெளிவாகக் கருத்து விளங்குமாறு சொற்பிழையில்லாது தொடர்ந்து சொல்லவேண்டும்.

ஒருவன் ஒன்றைச் சொல்லப் புகுமுன், தான் சொல்ல நினைப்பது இன்னதென்பதைத் தெளிவாக ஒருவன் அறிந்திருத்தல் வேண்டும். அப்போதான் அதனைத் தெரிவிக்கின்ற சொற்களும் தெளிவாக அமையும். அவ்விதமன்றி, சொல்லப் போவானுக்கே, தான் சொல்லப் போவது இன்னதென்று புரியாவிடின் அவனது சொல்நடையும் பிறர்க்கு விளங்காமல் குழப்பந் தரத்தக்கதாயிருக்குமென்பதில் ஐயமென்ன?

சிலர் தாம் சொல்ல நினைக்கும் கருத்துத் தம் மனத்தில் விளங்கியிருந்தாலும், வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை என்பர். அது நம்பத்தக்கதல்ல. ஏனென்றால், கருத்து மனத்தில் நன்கு புலப்பட்டிருக்குமாயின், அது தங்காது வெளிவரும். பின் ஏன், அவர் அங்ஙனம் கூறுகின்றனர்? தமக்கு விஷயம் விளங்கவில்லை என்று வெளியிற் சொல்ல வெட்கப்பட்டேயாம். ஆனால், விடயத்தை நன்கு விளங்கிக்கொண்ட ஒருவன், வெளியில் வெகு அழகாக, யாவர்க்கும் இனிது விளங்குமாறு பேசுவான். அவனது மொழிநடையும் அவன் கருத்துகளைப் பின்பற்றிப் பருந்தும் நிழலும் போலப் பிணைந்து செல்வதைக் காணலாம். எனவே, விடயத்தை ஒருவன் எவ்வளவு நுட்பமாகவும் தெளிவாகவும் அறிந்திருக்கிருனே அவ்வளவுக்கவ்வளவு அவனது நடையும் தெளிவாகவும் நுட்பமாகவும் அமையும். வருத்தத்தோடு தான் கண்ட ஒன்றைப் பற்றிப் பேச வருவானுயின், அவனது நடையிலும் வருத்தமமைந்திருக்கும். ஆர்வத்தோடு தான் கண்டதை மற்றவர்க்கு அறிவிக்க வருவானுயின், அவன் நடையிலும் ஆர்வமே நிறைந்திருக்கும். ஆகவே, எவ்வளவு விஷயங்களை எந்த நிலையில் தெளிவாகவோ, சிக்கலாகவோ அறிந்துள்ளானே, அதற்கேற்பவே அவனது நடை அமையுமே யன்றித் தனியாக "மொழிநடைப் பயிற்சி" என்று உண்மையில் ஒன்றுமில்லை. ஒருவன் தன்னை அறிஞனுக்கிக் கொண்டால், அவனது நடையும் அறிவுள்ளதாய் விளங்கும். அறிஞர் விரும்பத்தக்கதாயமையும். சுருங்கக் கூறின், கல்வி, கேள்வி, சிந்தனை, மனத்தூய்மை, நுண்ணறிவு முதலியவற்றினுல் ஒருவன் உயர்கின்ற நிலையைப் பொறுத்து அவன் நடை, சுவையும் தெளிவும் பயனும் உடையதாய் விளங்கும். பலர் தமது நடை கடினமாய் இருப்பின், பிறர்தமைப் பெருமைப்படுத்துவர் என்ற தப்பெண்ணத்தைக் கொண்டு கண்டபடி அகராதியிலுங் கிடையாத சொற்களை எழுதிவிடுகின்றனர், இது, பெருந்தவறு. அவரின் கட்டுரையைப் படிப்பவர் அக் கட்டுரையாளர்க்கு எவ்வளவு பெருமை அளிப்பர்? அவரைச் சபிப்பர் என்றே சொல்லல் வேண்டும். ஒருவன் தன் கருத்துகளை மிகத்தெளிவாக எளியமுறையில் இனிய நடையில் அறிவிப்பானுயின், அவனையே உலகம் பெருமைப்படுத்தும். அவனே யாவராலும் போற்றப்படுவான்.

ஆகவே, பெருமைக்கு ஆசைப்படாது விடயங்களைத் தெளிவாக உணர்ந்து, அவற்றைத் தெளிவாக யாவரும் உணரத்தக்கவாறு எளியநடையில் பேசுவோரையும் எழுதுவோரையுந்தான், உண்மையான மொழிநடைப் பயிற்சி யுடையவர் என உலகோர் மதிப்பர். மேலும் உண்மையான மொழிநடைப் பயிற்சி பெற ஓரளவு இலக்கணப் பயிற்சி அவசியம். இலக்கணம் அறிந்திராவிடின், நடை நன்கு அமையாது. பலர் இலக்கணம் அறியாமல், 'கேழ்க்கிறுன் கார்த்தான், சுவற்றில்' என்னும் சொற்களைப் பொருளமைதி தெரியாது எழுதிவிடுகின்றனர். அதனுல் அவர் தம் இலக்கணப் பயிற்சிக் குறைவு உலகத்தாருக்குத் தெற்றென விளங்குகின்றதே யன்றி, எழுதுபவர் பெறும் பெருமை ஒன்றுமில்லை. இப்பிழைகளே அவர் கற்றிலர் என்பதற்குப் போதிய சான்றாகும். அத்தகையர் பிறர்க்குப் போதிப்பதிலும் தாமே முயன்று கற்றல் நலமன்றே?

(தொடர்ச்சி 304-ம் பக்கம் பார்க்க)

"கணிகண்ணர் போகின்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."
என்ருர்.

ஆழ்வாரின் பைந்தமிழின் சுவையை அனுபவித்த விஷ்ணுவுக்கு மாறுசொல்ல மனமெழவில்லை. அவரை விட்டுத், தனித்திருக்கவும் முடியவில்லை. அவர்களின் பின்னே புறப்பட்டார்.

காஞ்சிமாபுரம் இருள் படிந்து வளம் குன்றி காடு போலானது. செல்வமழிந்தது. மூதேவி குடிகொண்டாள். அரசன் திகைத்தான். பெருமூச்சு விட்டான். மந்திரிமாருடன் ஆலோசித்து விஷயத்தைத் தெளிந்தான். அவர்கள் சென்ற விடத்தையறிந்து ஓடோடியும் சென்ருன். அனலிடைப்பட்ட மெழுகென உருகி, வாடி வதங்கி, ஆழ்வார் திருமுன்சென்று இரந்தான். பன்முறை மன்ருடினுன். கல்லும் கசியும் தன்மையா யிருந்தது. ஆழ்வார் என்செய்வார்! இரங்கினுர்; திருவுளம்கொண்டார்.

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீகிடக்க வேண்டும் – துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தே னீயுமுன்றன்
பைநாகப் பாய்படுத்துக் கொள்"

என்ருர் விஷ்ணுவை நோக்கி. விஷ்ணுவும் அப்படியே சென்று எழுந்தருளினுர்

திருமழிசை ஆழ்வாரின் பைந்தமிழுக்கு இவர், அவரது சொற்படி நடந்தமையினுலே "தமிழின் பின் சென்ற பெருமாள்" என்று அழைக்கப்படுகின்ருர். 'சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

சகுனம்

எனக்கு ஒரு "தாத்தா" உண்டு. அவருக்குச் சுமார் தொண்ணூறு வயதுக்குக் குறையாமலிருக்கும். அவரின் தலையில் வெள்ளிக்கம்பியோவென ஐயுறத்தக்க நரையுண்டு. ஆனால் ஆளோ நல்ல இளந்தாரிக் கட்டை மாதிரி. தருணம் வாய்த்தால் நல்ல ஸ்வாரசமான கதைகள் சொல்லுவார்.

ஒரு சனிக்கிழமை, நேரம் நாலரை மணியிருக்கும். நானும் "தாத்தா"வும் வயற்புறம் உலாவப் போனோம். "சகுனம் என்றால் என்ன?" என்று நான் "தாத்தா"வைக் கேட்டேன். சகுனம் என்னும் விஷயம்பற்றி அவர் ஓர் விரிவுரை கொடுத்தார்.

"சிலர் எந்தக் காரியத்தையும் சகுனம் பார்க்காமற் செய்வதில்லை. காலையிற் றூங்கி விழித்தவுடன்கூடச் சகுனம் பார்ப்பார்கள். தினசரி வாழ்க்கையில் அவர்களுக்கு ஏதேன் துன்பம் நேர்ந்தால் "இன்றைய தினம் யார் முகத்தில் விழித்தேன்" என்றுகூறி, அன்றையதினம் தான் முதலில் விழித்தவனை நோவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாகப் பல கதைகளுள. ஒரு கதையைச் சுருக்கமாகக் கூறுகின்றேன்" என்று சொல்லிக் கதையைத் தொடங்கினார்.

"முன்னொரு காலத்தில் ஓர் அரசன் எதற்கும் சகுனம் பார்த்துவந்தான். ஒருநாட் காலை அரசன் நித்திரைவிட்டெழுந்து சாளர வழியாக (வெளியே) வீதியை நோக்கினான். (வீதியின் எதிர் அகத்தில் வசிக்கும் விவேகி அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து மேற்படி வீதிவழியாக வந்தார்.) அரசன் விவேகியில் அன்று விழித்தான். உடனே அரசன் தனது தலையைச் சன்னல்வழியே உள்வாங்கினான். அப்பொழுது அரசனுடைய தலை சன்னலில் மோதுண்டது. அவன் தலையினின்று இரத்தம் ஆறாய்ப் பெருகியது.

விவேகியைப் பார்த்ததாலல்லவா அரசனுக்குக் காயமேற்பட்டது? ஆகவே "அவன் மிகவும் கெட்டவன். அவன் சிரசைச் சேதிக்கவேண்டும்" என அரசன் தீர்மானித்தான். உடனே அரசன் சேவகர்களை அழைத்து வீதியிற் சென்ற விவேகியைப் பிடித்துக் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். சேவகர்கள் அவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

விவேகி சேவகர்களிடம் தம்மைப் பிடித்த காரணத்தை அறிந்துகொண்டார். தன்னைக் கொலை செய்யுமுன் தான் அரசனைக்காண விரும்புவதாக அவர் கூறினார். சேவகர்கள் அவர் விருப்புக் கியைந்தனர்.

அரசன் விவேகியைப் பார்த்து, "உமக்கு என்ன வேண்டு"மென்று கேட்டான். விவேகி "எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. தங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கின்றேன்" என்றான். அரசன் "அது என்ன?" என்று வினவினார்.

விவேகி, "சுவாமி காலையில் என்முகத்தில் விழித்ததனாலல்லவா தங்களது தலையில் இரத்தக்காயம் உண்டாயது? முதலில் நான் தங்கள் முகத்தில் விழித்ததனாலல்லவா என்தலை போகப்போகிறது. இதற்கு என்ன தீர்ப்புச் சொல்லுகிறீர்கள்?" என்றான். அரசன் தனது மூடத்தனத்தை உன்னி விவேகியை விடுதலை செய்தான்" என்று கூறிமுடித்தார்.

சி. அரசரத்தினம், (180)
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை.

ஈகை

ஈகை யென்பதனர்த்தம் ஈதல். 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயர். அஃதாவது, விருத்தமுறும் வறியார்க்கு—இரவலாளருக்கு இல்லென மொழியாது கொடுத்தல். இஃதே யீகையும் எனப்படும். "வறியார்க் கொன்றீவதே யீகை, மற்றெல்லாங் குறிபெதிர்ப்பை நீரதுடைத்து" என்று செந்நாப் புலவரின் செந்தமிழ்ச் செய்யுளும் அறியத்தக்கது. எனவே, கைப்பொருளற்ற வறியார்க்கு, அவர் விரும்பினதொன்றை வரையாதளித்தலே ஈகையின் இலக்கணமாம்.

ஈதல் பலவகைப்படும். அவை. பயன் கருதியீதல், பயன் கருதாது ஈதல், குறியெதிர்ப்பை நோக்கியீதல், மங்கள காரியங்களினிமித்தம் ஈதல், உவகையிலீதல், வெகுளியிலீதல் என்பன. இவற்றுள் பயன் கருதாது வறுமையாற்றலிக்கும் யாவர்க்கும் குறைவின்றி யளித்தலே இம்மையில் மங்காப் புகழையும், மறுமையில் வீட்டையும் உய்ப்பது. மற்றவைகள் வீண் புகழ்ச்சிக்கும், தற்பாதுகாப்புக்கும், பொருள் வளர்ச்சிக்கும், மரியாதைக்கும் ஏதுவாக இருத்தலின் அவற்றை விடுத்து ஈண்டு யாவர்க்கும் நன்மை பயக்கும் நெறியால் பயன் கருதாது கொடுக்கும் ஈகையையே எடுத்தியம்புதும்.

மக்களாகிய நாங்கள் எங்கள் பிறப்பினருமையை உணரவேண்டும். இப்பிறவி மேலானது, சிறந்தது. இறைவனின் நீழலையடைய இப்பிறவியைப்போல் மேலானது ஒன்றுமில்லை. அருமையான பொருள் ஒன்றைப் பெற்றபொழுதே, அதனை நல்வழியில் உபயோகிக்கவேண்டும். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வருமோ....." என்று கூட தாயுமான சுவாமிகளும், "......மேலுமிப்பூமிசை என்னன்பாலிக்குமாறு கண்டின்புற இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்று நாவுக்கரசசுவாமிகளும் இப்பிறவியினருமையை உணர்ந்து வருந்துகின்றார்கள். எனவே நாங்களும் அரிய பிறவியினருமையைச் சிந்தித்து, வாளா கழியாது செய்யத்தக்கனவற்றை செய்து, பிறவியை நீந்த விழையவேண்டும். "தானமும் தவமும் தான் செய்வாராயின், வானவர் நாடு வழிதிறந்து விடுமே" என்று ஔவையார் கூறுதலால், ஈதலே—வறியார்க்குக் கொடுத்தலே பிறவியை நீந்தற்கேற்ற விழுமிய மருந்தாகும் என்பதற்கு ஆசங்கை எட்டுணையேனுமின்று.

நானென தன்மை நழுவியே எவ்வுயிர்க்குந், தானென உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ.

ஆதலால் மக்களாகிய நாங்கள் விழுமிய மருந்தைக் கண்டதும் உண்ணாமல் வைத்திருக்கவேண்டிய தில்லை. தளர்ந்தார்க்கு விரும்பிய மனத்துடன் அளிக்க வேண்டும். தினையளவு உணவாயினும் பசித்தோர்க்கிட்டு உண்ணவேண்டும். 'ஈ' என்று ஒருவர் வந்து இரந்தால் 'சீ' என்று துரத்தாது ஏதாவது கொடுக்கவேண்டும், "உள்ளன்புடன் விரும்பி இம்மியரிசியளவாயினும் தருமஞ் செய்தால் முத்தி தவறாது சித்திக்கும். தேவர்கள்கூட இவ்வீகையாளர்களின் வரவை விழித்த கண்ணும் இமையாது எதிர்பார்த்திருப்பர்" என்றுகூடச் சான்றோர் நவின்று இருக்கின்றனர்.

"......சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தாணிபுகழ் தரும தேவனும்
பொன்மட் டில்லாம லீந்தொரு நூறுபேரைப்
புரப்பவன் பொருவி லிந்திரன்
புவிமீதி லாயிரம் பேரைக் காப்பாற்று
புண்ய வானே பிரமனும்
நன்மைதரு பதினாயி ரம்பேர் தமைக்காத்து
ரட்சிப் பவன் செங்கண்மால்
நாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நானே மிகு தேவனும்........"

என்று நீரதம் கொடுத்தினைக்கும் தாதாக்களின் ஒவ்வொரு உயர்ந்தபடிகளை இப்பாசுரத்தில் தெளிவாய்க் காணலாம்.

தவம்புரியும், தவசிரேஷ்டர்களுக்கு வலியாவது பசியாற்றல். ஆனால் இவர்களின் வலியினும் அதிகம் வலிமையுடையவர் பிறர்பசி தணிக்கும் ஈகையாளராம். இதனை,

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்."

என்று செந்நாப் போதாரின் திவ்விய வாக்காலறியலாம்.

ஈகையின் சிறந்த இலக்கணம், இரப்பவரைக் கண்டபொழுது முகமலர்ச்சியும், அவர் நெருங்கிவந்தபொழுது இன்சொல் உடைமையுமாம். "காலையி லொன்றுவார், கடும்பகலிலொன்றுவார், மாலையிலொன்றுவார் மனிதரெல்லாம்" என்ற நரைமுதிர் கிழவியின் வாக்குக்கு இலக்காகாது எந்நேரத்திலும் இரவலாளர் வந்தால் முகமலர்ச்சியுடனீதல் வேண்டும். முகமலர்ச்சியே உள்ளத்திலெழுந்த உண்மையன்பை ஆடிபோல் வெளிக்காட்டுவது. "கோணிக் கோணி கோடி கொடுப்பதும் கோணாமல் மாகாணி கொடுப்பதும்" சரியல்லவா?

சிலர் பசித்தவர்க் கொன்றுங் கொடார். சிலர் கொடுப்பவரையும் தடுப்பர். இவர்கள் இரப்பவரிலும் கெட்ட ஈனர்களாம் என்பதனை,

"இரப்பவன் புவிமீதி லீனன்அவ னுக்கில்லை
யென்னுமவன் அவனி லீனன்
ஈகின்ற பேர்தமை யீயாமலே கலைத்
திடுமூடன் அவனி லீனன்........"

என்பதாலறியலாம்.

சிலர் யாசகர்க்கு ஆசைவார்த்தைகள் கூறி அலையவைப்பார்கள். பின் சிலநாட் சென்றதும் "கரியாய்ப் பரியாகி, கடெருமைதானாய் எருதாய் முழப்புடவையாகி" இறுதியில் ஒன்றுங் கொடாமற் துரத்திவிடுவர் இவர்கள் பாரில் எல்லோர்க்கு மீனர்களாம்! அந்தோ! இவர்களின் பேதமைதான் என்னே!

பண்டைக்காலத்தில் ஈகையிற் சிறந்த ஈகையாளர்கள், நம் பைந்தமிழ் நாட்டில் மல்கியுறைந்தனர் என்பதை நூல்கள் வாயிலாகவும், கேள்வி வாயிலாகவும் நாமறிந்திருக்கிறோம். அன்றி இன்றுமறிந்து வருகிறோம். அவர்களுள், "செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன்" என்பவர்கள் உறுபொருள் தண்டாதீந்த முதலெழு வள்ளல்கள். "அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன்", என்பவர்கள் வாரியில் இரந்தோர்க்கிட்ட இடையெழு வள்ளல்கள். "பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி" என்பவர்கள் விளர்புகழ் துதிக்கவீந்த கடையெழு வள்ளல்கள். இவர்கள் "திங்கட்குழவியும் சிங்கப்புறமும், குதிரைமருப்பும் முதிர்ச்சுவைசுரபியும், ஈகென மொழியினும் இல்லென மொழியா" பெருந்தகையாளர்கள். இப்பெருந்தகையாளர்களே நம் பைந்தமிழ் நாட்டில் வானின்றிழிந்த வைரம்போல நலஞ்சிறந்து விளங்கியவர்கள். இவர்களேயன்றி இன்னும் வண்மையிற் சிறந்த வள்ளல்கள் பலர் நம்நாட்டில் இருந்தனர். விரிவஞ்சி இத்துடன் விடுக்கின்றோம்.

ஆதலால் மக்களே! மனிதருக்கு வயது நூறல்லதில்லை. ஐம்பது வயதும் துயிலினால் கழிந்தது. பதினைந்து வயதும் ஆக்கையிளமையால் கழிந்தது. இளமையில் ஐந்து வயதும் கழிந்தது. மிகுதி முப்பது வயதே. அவற்றுள் இன்புறுநாளுஞ் சில. துன்புறுநாளுஞ் சில. ஆதலால் "செல்வம் பெருகிவரும் நதியையொத்தது; பெருக்காலிடிகரை யொத்தது இளமை; இடிகரைவாழ் மரமொத்தது வாழ்நாள்." என்பதையுன்னி இனே செய்யவும் அறத்தை "என்னுளும் ஒன்று தம் கைவரப் பெற்றக்கால் பின்னுவதென்று பிடித்திரா" உடனே கொடுங்கள்; கொடுங்கள். நாளே நாளேயென்பீராகில்,

"நம்முடை முறைநாள் ஆவது மறியீர்
நமனுடை முறைநாள் ஆவது மறியீர்
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னை
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தரியான் ஒருகணம் தறுக ணாளன்
உயிர் கொடு போவான்............"

ஆதலால் நீங்கள் மனம்புழுங்கி "நாய் காணு கற்காணுவாறு" போல அழுங்குவீர்கள்! அழுங்குவீர்கள்! பேதையீரே! முன்னோர் உரைத்தமொழி தவறாமல் இரப்பவர்க்கிட்டு, புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து வாழுங்கள்; வாழுங்கள். சுபம்! சுபம்!! சுபம்!!!

S நடராசா, (278)
S. S. C. மாணவன்.

சிந்தை மறந்து திருவருளாய் நிற்பவர்பால், வந்தபொருள் எம்மையுந்தான் வாழ்விப்ப தெந்நாளோ.

ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள்,

கல்வி வாரம் பெரிய ஆரவாரமாக எங்கும் மளமளப்பாயிருக்கிறது. வித்தியாசாலைகளிலெல்லாம் உபாத்தியாயர்களும் மாணவர்களும் தடபுடலான காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். சில பாடசாலைகளில் சிற்றுலாக்களும் தயாரிக்கப்படுகிறதாகத் தெரிகிறது. இன்னும் சிலர் எங்கள் பத்திரிகாலயத்தைக் கூட வந்து பார்வையிடப் போகிறார்களாம். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் தாத்தாவை மாத்திரம் பார்த்து விடலாமென்று நினைக்க வேண்டாம்! தாத்தா காரியாலயத்திலிருக்க மாட்டார்!

எங்கள் அரசாங்கத்தாரும் கல்வி விஷயத்தில் பலவிதமான சிரத்தைகள் காட்டுகிறார்கள்தான். ஆனால் இவையெல்லாம் போதுமானவைதானா? பாடசாலைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

இன்னும் தாத்தாவும் இந்தவகையில் கொஞ்சம் உதவி செய்யத்தான் யோசித்திருக்கிறார். இந்தவாரம் ஒரு புதிய திட்டம் போட்டிருக்கிறார், கேளுங்கள் :

தமிழில் வியாசமெழுதுவதில் எத்தனைபேர் உங்களில் திறமையுள்ளவர்களாயிருக்கிறீர்கள்? இளைஞர் சங்கத்தில் சேர்ந்தவர்களில் பலர் 'கல்வி அனுபந்தத்'துக்குக் கட்டுரைகள் எழுதியெழுதிப் பயிற்சி பெற்றிருப்பீர்கள். ஆனால் இன்னும் சங்கத்தில் சேர்ந்து கொள்ளாதவர்களில் எத்தனையோபேர் திறமையான எழுத்தாளர்களாயிருக்க மாட்டார்களா? ஆகவே நான் இலங்கையிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளெல்லாவற்றிற்கும் ஒரு புதிய வியாசப்போட்டி ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறேன்.

இதைப்பற்றிய விபரங்களை அடுத்தவார ஈழகேசரியில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

* * *

நண்பர்கள் கடிதப் போட்டி விஷயம் நாளை நின்று செவ்வாய்க்கிழமை முடிவடைகிறதென்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? கட்டாயம் 25-7-39 தான் கடைசித் தேதி. ஆகையால் அதற்குமுன் காரியாலயத்தில் சேரக்கூடியதாக உங்கள் மனத்துக்குப் பிடித்த ஒரு கடிதத்தை அனுப்பிவையுங்கள். கடிதமெழுதிய நண்பரின் பெயரும் விலாசமும், எழுதப்பட்ட நண்பரின் பெயரும் விலாசமும் சந்தா எண்களும் குறிப்பிடப்படவேண்டும்.

—தாத்தா

(301-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளே! நீங்கள் பல புத்தகங்களைப் படிக்கப் படிக்கச் சுவைபொருந்திய நடை எல்லோராலும் விரும்பத்தக்க நடை உங்கட்குத் தானாகவே அமையும். ஆழ்ந்த அறிவு, நல்ல நூல்களைப் படிப்பதாலே நன்கு அமையும். நடை வளர வேண்டுமெனத் தவஞ் செய்ய வேண்டாம். மேலான கருத்தமைந்த சங்க நூல், உரை நடைநூல் முதலியவற்றைக் கற்றறிதல் வேண்டும். இவ்வாறு நீங்கள் பயில்வீர்களாயின் உங்கள் நடை இயற்கையழகு வாய்ந்து இனியசுவை பெற்று மிளிரா நிற்கும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"!

V. சர்வேஸ் வரசர்மா. (261)
J. S. C. மாணவன்
உடுவில் தெற்கு சைவவித்தியாசாலை.

விண்ணப்பப் பத்திரம்

திகதி........................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்..

பிறந்த திகதி....................மாதம்....................வருடம்....................

விலாசம்..

....

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" ததி விருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு ஜூலாய்மீ 23உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.